அம்பலம்

...He is one in Million

Sir C. V. Raman



பிப்ரவரி '74 ✷ மாத இதழ் ✷ 50 காசுகள் ✷ முதல் இதழ்

Chewers' Favourite
ASOKA
MILD SCENTED
BETEL NUT POWDER

சே. ப. நரசிம்மலு நாயுடு

இந்த மேம்பாலம்

மேம்பாலங்களுக்குச் சிறப்புப் பெற்றது தமிழ்நாடு. பாலங்கள் கடப்பதற்கு மட்டுமல்ல, இணைப்பதற்கும் உதவும் ஒரு சாதனம்.

பழமைக்கும் புதுமைக்கும் பாலம் தேவை. கடந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் இணைக்கும் பாலம் தேவை. எழுச்சிகொண்ட இளைய சமுதாய எண்ணங்களையும், முதிர்ந்த தலைமுறையின் கோட்பாடுகளையும் இணைக்கும் பாலம் தேவை. அழிவையும், அமரத்துவத்தையும் சேர்க்கக் கூடிய ஆன்மீகப் பாலம் தேவை.

மனிதனின் எண்ணங்கள் அடிப்படையில் ஒன்றாக இருந்தாலும் மொழி வேலிகளாலும், இனச் சுவர்களாலும் மத எல்லைகளாலும் பிளவுபட்டுச் சிதறிக் கிடக்கின்றன.

இந்தச் சுழலில் மனிதமனங்களை இணைக்கும் பாலமாக மேம்பாலம் தன்னை அர்ப்பணித்துக்கொள்கின்றது.

திங்கள் தோறும் சான்றோரின் எண்ணச் சுவடுகள் இந்த மேம்பாலத்தில் நடை போடும்.

நரசிம்மலு நாயுடு அறக்கட்டளையின் சார்பில் வெளியிடப்படும் இந்த 'மேம்பாலம்' உங்கள் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் என்று உறுதி கூறுகிறேன்.

ஆசிரியர்

கௌரவ ஆசிரியர்
பா. ராமமூர்த்தி
பி.காம்., பி.எல்.



நீதியால் வந்ததொரு நெறி

சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி
மேதகு. P. R. கோகுலகிருஷ்ணன் அவர்கள்

போரிலே இராமன் கும்பகர்ணனை வீழ்த்தி விடுகிறார். வீழ்ந்துபட்ட கும்பகர்ணனிடத்தில் சென்று இராமர் கேட்கிறார், 'உனக்கு என்ன வரம் வேண்டும்' என்று. அப்போது கும்பகர்ணன், 'என்னுடைய தம்பியை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள். அவன் நல்லவன், உயர்ந்தவன், பண்பாளன். அவனை உங்களிடத்தில் விட்டு விடுகிறேன்' என்று சொன்னானும். அப்படிச் சொல்லுகின்ற கும்பகர்ணன் 'நீதியால் வந்ததொரு நெடுந்தரும நெறியல்லால் சாதியால் வந்த சிறு நெறியறியான் என் தம்பி' என்று குறிப்பிடுகிறார். நீதியின் வழியிலே வந்த தத்துவத்தைத்தான் என்னுடைய தம்பி உணர்ந்து இருக்கிறான். ஆனால் ஜாதியின் வழியிலே வந்த தத்துவத்தை அவன் உள்ளத்திலே கொண்டது இல்லை என்ற கருத்தினைக் கும்பகர்ணன் இப்படிச் சொல்கிறான்.

அந்த முறையிலேதான் நரசிம்மலு நாயுடு அவர்கள் ஜாதியெல்லாம் உயரத் தூக்கி எறிந்து விட்டு இந்தச் சமுதாயம் வாழ வேண்டுமென்பதற்காக, பெண்களை மிருகங்களாக நடத்தப்பட்ட நிலையை மாற்றி

யமைக்க வேண்டும் என்பதற்காக சிறந்த சீர்திருத்த வாதியாகக் காட்சியளிக்கிறார். அவருடைய நம்பிக்கை சமுதாயம் முன்னேற வேண்டும் என்பது. இத்தகைய உயர்ந்த பெரியவரை போற்றுவதற்காக இந்த நிறுவனத்தார் இத்தகைய விழாக்களைக் கொண்டாடி வருகிறார்கள். ஆகவே நாம் அதை நிச்சயமாக வரவேற்க வேண்டும். இவர் தனிப்பட்ட சமுதாயத்திற்கோ ஜாதிக்கோ சொந்தமானவரில்லை. தமிழ் சமுதாயத்திற்கு ஏன் மனித சமுதாயத்திற்கே சொந்தமானவர். கல்வி சாதிக்கு மேம்பட்டது, ஆகவேதான் கல்வியறிவு நிரம்பப் பெற்று விட்டால் நம்முடைய பகுத்தறிவையும் சிந்தனையையும் பாதித்துக் கொள்ளாமல் மனத்தை நாம் வளர்த்துக் கொள்ள முடியும். ஜனநாயகத்தைப் பற்றி எவ்வளவு தான் நாம் பெருமையாகப் பேசினாலும், நம்முடைய சமுதாயம் கல்வி அறிவில் உயர்ந்தால்தான் அந்த ஜனநாயகத்தைக் கட்டிக் காக்க முடியுமே தவிர கல்வியறிவு இல்லாத சமுதாயத்தை நாம் வைத்துக் கொண்டிருப்போமேயானால் ஜனநாயகம் வெற்றி பெற முடியாது. ஏதோ சில தலைவர்கள் சொல்கிறார்கள் ஆகவே, கேட்க வேண்டுமென்ற ஆட்டு மந்தைகளைத் தான் நாம் உருவாக்க முடியுமே ஒழிய கல்வியறிவு பெற்றுச் சொல்கிறவன் சொல் சரியான சொல்லா என்று சிந்திக்கும் மனிதர்களை நாம் பெற முடியாது. அப்படிப் பெறவேண்டுமென்றால் கல்வி மிகமிக அவசியம். அந்தக் கல்வியறிவை அளிக்கின்ற நிறுவனம்தான் இந்த நிறுவனம். இந்த பெரியவர்தான் நரசிம்மலு நாயுடு அவர்கள் ஆகவேதான் ஜனநாயகம் தழைக்க வேண்டும் என்ற எண்ணம், நாட்டிலே சமுதாயம் மகிழ்ந்துவாழ வேண்டுமென்ற எண்ணம் நரசிம்மலு நாயுடு உள்ளத்திலே இருந்தது. அந்த வழியிலே வந்தவர்கள் அதை விடாமல் வகுத்து வருகிறார்கள் என்பதைக் காண்கிற நேரத்திலே நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். நரசிம்மலு நாயுடு அவர்கள் இன்னும் சில விஷயங்களைச் செய்து இருக்கிறார்கள். கோயமுத்தூர் லங்காஷயர் என்ற அளவுக்கு வளர்ந்து இருக்கிறதென்றால், இதற்கு வித்திட்டவர் நரசிம்மலு நாயுடு என்பதைப் படித்து மகிழ்ச்சியோடு தெரிந்து கொண்டேன். நூற்பாலை இங்கு ஆரம்பித்த காலத்தில் அதை ஆரம்பிப்பதற்கு காரணமாக இருந்தவர் நரசிம்மலு நாயுடு அவர்கள்தான். தொழில் வளத்தில் கோவை ஜில்லா அதிகமாக வளர்வதற்கு காரணமாக இருந்தவர். கோவை ஜில்லா வளர்கிறது என்றால் தென்னகம் வளர்கிறது, தென்னகம் வளர்கிறது என்றால் இந்த இந்திய உபகண்டமே வளர்கிறது. இப்படி வளர்ச்சிக்கு வித்திட்டவரே நரசிம்மலு நாயுடு அவர்கள்.

இன்றைக்கு சிறுவாணித் திட்டத்தைப் பற்றி பேசுகிறோம்.

இந்தத் திட்டத்தைப் பற்றி பல ஆண்டுகளாகப் பேசிப் பேசி வர வில்லையே என்று ஏக்கத்தோடு இருந்து இருக்கிறோம் ஆனால் 1854-ல் பிறந்த நரசிம்மலு நாயுடு அவர்கள் சிறுவாணித் திட்டம் பயன்தரும் இந்த அரு மையான திட்டத்தை அளித் திருக்கிறார்கள். இப்படி இக் காலத்திலேநிறைவேற்றவேண்டு மென்ற திட்டங்களை எல்லாம் அவருடைய அறிவிலே இருந்து நமக்கெல்லாம் அள்ளித் தந்து சென்றவர்தான் நரசிம்மலு நாயுடு அவர்கள். இந்தப் பெரிய வரை நாம் போற்றி வருகிறோம்.

இந்தக் கோவை ஜில்லாவில் ஆற்றுகின்ற பணி நாட்டுக்கும், நல்லவர்களுக்கும் பாமர மக்களுக்கும் பயன் படட்டும் என்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பெரிய வரை மறக்காமல், விட்டுச் சென்ற அந்தத் தத்துவங்களை நமக்குத் தந்த அந்தப் பெரிய வரை நாடறியச் செய்ய வேண்டு மென்ற சூளுரையை இன்றைக்கு நாம் எடுத்துக்கொள்ள வேண்டு மென்பதைத்தான் நான் பணி வன்போடு தெரிவித்துக் கொள் கிறேன்.

மஹாத்மாக்கள்

பன்னீர்ப் பூக்களின் தோட்டத்தில்
சாக்கடை கங்கையின் ஓரத்தில்
ஐந்தடி நீள ஆசிரமத்தில்
'அவதரித்த' நாங்கள்
மனிதர்களல்ல
'மஹாத்மா'க்கள்

உடைந்த சட்டியின் ஓரத்தில்
கையைக் குவித்து
தண்ணீர் குடித்து
வளரும் நாங்கள்
பத்து நாட்களில்
பதினைத்து வேளை
''ஏகாதசி'' விரதமிருந்து
எம்பெருமானை துதிக்கும் நாங்கள்
மனிதர்களல்ல
மஹாத்மா'க்களே.

—வானம்பாடி இதழிலிருந்து

Education - Employment

New - Dimension

Justice S. NATARAJAN
High Court-Tamilnadu.

I read with considerable interest, on the Burning issue of today and I am offering my comments on the views expressed by Mr. G. K. SUNDARAM with reference to the questions as to (1) Whether practical education must be imparted at the high school level itself and how it is to be achieved and (2) What are the suggestions for providing employment opportunities among the educated.

With reference to Question No. 2, my comment is as follows :

I welcome the views of Mr. G. K. Sundaram and I am generally in agreement with his opinion. However, I feel that practical education must start even from the Secondary school level. As you are well aware, the present system of education completely robs children of their ability to do practical work of any type. Even if a small nail is to be hammered or a nut or screw tightened, or loosened, or a bulb of fuse to be replaced, or an electric plug to be connected, our school boys find themselves completely lost. Therefore, during their years of study in the primary classes, boys and girls must be suitably prepaped so as to have the inclination and the confidence to take to practical education when they reach the High school level. Training in simple arts and crafts like preparing vegetable gardens, flower-beds, pruning and weeding of plants, stitching of buttons,

cutting of dolls in card-board, fixing or removing bulbs, inflating and deflating cycle tubes, vulcanizing cycle tubes, screwing and unscrewing nuts, bolts etc., must be given. Likewise, painting doors, windows etc., polishing of tables, chairs etc. must also be taught.

When the students reach the High School, they should be given practical education on modern, well formulated and useful lines. At present, the training given in arts and crafts is outmoded, if not primitive. Training is given in carpentry, tailoring, book-binding etc. in old fashion-methods. On the other hand, the students must be given training in useful techniques such as grinding, cutting, sawing, planing etc. with lathes and sophisticated machinery. Training can also be given in spray-painting, automobile engineering, radio mechanism, cycle mechanism, printing, designing, modern wood-work etc. The aptitude of each student should be assessed by a small committee of experts and the student then given training in the subject in which he has interest and aptitude. Agriculture, and that too practical agriculture, including horticulture and floriculture must also be compulsorily taught to every student. To accomplish effective results in the matter of practical education the syllabus in the school system should be suitably changed. In my opinion, the time spent on imparting Grammar education to children can be conveniently saved, Likewise, lessons in history need not be arduous and taking with numerous data and details regarding the various wars that were fought by kings, the regions captured by them etc. It is enough if the students are given a basic insight of the events which happened in the past and they need not be burdened with numerous and unwanted details.

A basic training in Book-keeping, Accountancy, Typewriting, Story-writing and Journalism can also be given to the students. The whole scheme must be such that when a boy or girl finishes schooling, he or she should be in a position to get absorbed in the stream of life as a craftsman or technician or an

employee. Only such of those children who have got the necessary mental equipment and the aptitude for it should think of pursuing higher education in colleges. Unless such drastic change is made in our educational system, our nation is bound to be faced with increasing millions of unemployed persons whose creative energy and vocational efficiency will be practically nil.

My comments on Question No. 7 are as follows :

From the practical education given in schools, the student as well as the parent and the teacher will be able to assess, in some measure, the particular type of work in which the student is interested. Based on that assessment, employment opportunities must be sought for. Well organised industries in various fields must be made to formulate schemes intended to provide training for youth trainees. Some of the industrial concerns can also entrust the schools themselves with manufacturing some of the products which do not require the use of complicated or sophisticated machinery. The profit derived from the execution of those works can be shared between the school and the student trainees. Groups of students can be sent to farms and factories to work there as farm hands and factory hands. Every factory and industrial concern must be made to take apprentice trainees. On Sundays and holidays the students can be asked to act as postmen, telegraphmen, traffic constables, composers and proof readers in presses etc. Above all these things, a feeling must be inculcated in the minds of the educated that there is dignity in labour and that no work or profession or craft is infra dig for an educated person to pursue.

'மேம்பாலம்' ஆசிரியருடன் பேராசிரியர் **திரு. ஜி. ஆர். தாமோதரன்** அவர்களும், மதுரைப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர், பன்மொழிப் புலவர் **திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்** அவர்களும்.

வாழ்க மணமக்கள்!

செல்வி
ஜோதிர் லதா
(திரு. T. G. கோபால் நாயுடு அவர்களின் புதல்வி)

செல்வன்
சி. ஆர். மதனகோபால் பி. டெக்.
(திரு. சி. என். ராதாகிருஷ்ணன் அவர்களின் புதல்வன்)

கவலைகளும் நோய்களும்

டாக்டர் எஸ். ஸ்ரீஹரி

கேள்வி. 1 உடலில் காணப்படும் பல நோய்களுக்கு மூல காரணங்கள் மனதில் உண்டாகும் கவலைகளின் அழுத்தமும் சோர்வும் என்று கூறப்படுகிறது. மன தத்துவம் அறிந்த தாங்கள் விளக்கிக் கூறவும்.

பதில். பொதுவாக கவலைகளினால் மனச்சோர்வு உடையவர்கள் (depression) தங்களுக்கு உடலில் பல்வேறு உறுப்புக்களில் தொந்தரவு இருப்பதாக டாக்டரிடம் வருவார்கள். உதாரண மாக தூக்கமில்லாமை, ஆண்மைக் குறைவு, உடல் இளைத்தல், பலகீனம், வயிற்று வலி, நெஞ்சி வலி, நாவறட்சி ஏற்படுதல், மலச்சிக்கல், நெஞ்சு படபடப்பு, அஜீரணம் என்ற பல்வேறு உபத்திரவங்கள் மனச்சோர்வின் அறிகுறிகளாக இருக்கும். நோயாளிகள் இவை நோயின் அறிகுறிகள் என்றும் தங்களுக்கு புற்றுநோய், இருதய நோய் போன்ற பெரிய வியாதிகள் வந்திருப்பதாகவும் நினைத்து மேலும் மனச்சோர்வு அடையக் கூடும்.

கேள்வி. 2 நரம்புத்தளர்ச்சி இயற்கையிலேயே ஏற்படும் ஒரு நிகழ்ச்சியா ? வயோகிதத்தின் அறிகுறியா ? நரம்புத்தளர்ச்சி உள்ளவர்கள் தாம்பத்திய வாழ்க்கையில் ஈடுபடலாமா ?

பதில். இயற்கையிலேயே மன உறுதி குறைந்தவர்கள் வாழ்க்கையில் துன்பங்களையும் தோல்விகளையும் ஏமாற்றங்களையும், சந்திக்கும்போது நரம்புத் தளர்ச்சிக்கு ஆளாகிருர்கள். இது வயோதிகத்தின் அறிகுறி அல்ல. எல்லா வயதினரையும் பாதிக்கலாம். நரம்புத் தளர்ச்சி உள்ளவர்கள் தாம்பத்திய வாழ்க்கையில் ஈடுபடலாம்.

கேள்வி. 3 நரம்பு மண்டலத்தை ஆரோக்கியமாகவும் நோயற்றதாகவும் இருக்க எடுத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கைகள் யாவை ?

பதில். நல்ல சத்துள்ள உணவுகளை உட்கொள்ளுவதும் சீரான உணவு முறையைக் (Balanced diet) கடைப்பிடிப்பதும் பொதுவாகவே உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியமாகும். நரம்பு மண்டலத்தின் ஆரோக்கியத்திற்கு அவசியமான வைட்டமின் B தயாமின் சத்து (Thiamine) கைக்குத்தலரிசி, இவற்றில் அதிகமாக உள்ளது. B Complex வைட்டமின்கள் நிலக்கடலை மோர், தயிர், முட்டை மற்றும் வைட்டமின் C சத்து நிறைந்த காய்கறிகள், பழவகைகள் போன்றவைகளை சீரான உணவு முறையில் சேர்த்துக் கொள்ள வேண்டும். சிகரெட், மது மற்றும் போதைப் பொருட்களைத் தவிர்க்க வேண்டும். வாழ்க்கையை மனேதிடத்துடன் மேற்கொள்ள வேண்டும். எந்த விஷயத்தையும் அதிர்ச்சியடையாமல் இலேசாக எடுத்துக் கொள்ளப் பழக வேண்டும். நவீன யுகத்தில் துரிதகதியில் இயங்கிவரும் வாழ்க்கை முறையில் உடலையும் மனதையும் Relaxed ஆக வைத்திருக்கப் பழக வேண்டும். மூளைக்கு அதிக உழைப்பு தரும் படியான வேலைகளை மேற்கொண்டிருப்பவர்கள் அவ்வப்போது ஓய்வுக்காகவும் ஒரு மாறுதலுக்காகவும் விடுமுறை எடுத்து வெளி இடங்களுக்குச் சென்றுவருவது நல்லது.

கேள்வி. 4 Stroke என்ருல் என்ன ? இது தாக்கும்போது ஏன் மனிதன் சுயநினைவு இழந்து விடுகிருன் ?

பதில். மூளையில் உள்ள ரத்தக்குழாயின் அடைப்பிஞலோ அல்லது வெடிப்பிஞலோ மூளையின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு இரத்த ஓட்டம் தடைப்பட்டு அந்தக் குறிப்பிட்ட பகுதியில் இயக்கப் படக்கூடிய உடல் உறுப்புக்கள் செயலற்று விடுவதே Stroke ஆகும். இதில் மூன்று வகைகள் உண்டு.

1. Cerebral haemorrhage எனப்படும் வகையில் ரத்தக்குழாய் வெடிப்பு ஏற்பட்டு ரத்தம் கசிகிறது. இதஞல் மூளையினுள்ளே

அழுத்தம் அதிகமாகி Conscious Centre-க்கு இரத்த ஓட்டம் தடைபட்டு நோயாளி சுயநினைவு இழந்து விடுகிறார். இரத்தக் கொதிப்பு நோய் உள்ளவர்களுக்கு இது ஏற்பட அதிக வாய்ப்புகள் உண்டு. இரத்தக் கசிவு அதிகமானால் பிழைப்பது அரிது.

2. ரத்தக் குழாய் அடைப்பினால் மூளையில் இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு உடலின் ஒரு பாதியோ அல்லது கை கால் போன்ற குறிப்பிட்ட பகுதி செயலற்றுப்போவது நிகழ்கிறது. அல்லது பேச்சு தடைபடலாம். இந்த வகையில் நோயாளி பிரக்ஞை இழக்காமல் இருக்கக் கூடும். அப்படி நினைவு தவறினாலும் தக்க சிகிச்சைக்குப் பின் நினைவு திரும்பக்கூடும்.

இதய நோயுள்ளவர்களுக்கு இதயத்தின் உள்ளே உருவாகக் கூடிய இரத்தக் கட்டி இரத்த ஓட்டத்தில் மூளைக்குச் செல்லும் ரத்தக்குழாயில் அடைப்பை ஒன்றுபடுத்துவதால் ஏற்படும் Stroke மூன்றாவது வகையாகும். இதற்கு ரத்த உறைவைத் தடுக்கும் மருந்துக்களைக் கொடுத்துக் குணமாக்கலாம்.

கேள்வி. 5 ஒற்றைத் தலைவலி ஏன் தாக்குகிறது? இந்தத் தொல்லையில் அவதிப்படும். பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு நிரந்தர நிவாரணம் அளிக்க முடியாதா?

பதில். ஒற்றைத் தலைவலி மூளைக்குச் செல்லும் ரத்தக்குழாய் சுருங்கி விரிவடைவதால் ஏற்படுகிறது. இது பல்வேறு காரணங்களாலும் ஏற்படலாம். எதனால் ஏற்படுகிறது என்று நிச்சயமாகக் கூறுவது கடினம். அதிக வேலைக்குப் பின் ஏற்படக்கூடிய மன ஆயாசத்தினால் ஏற்படக் கூடும். ஒற்றைத் தலைவலி உள்ளவர்கள் தங்கள் வாழ்க்கை முறைகளில் ஓர் ஒழுங்கை ஏற்படுத்தி (Regular habits) தலைவலி உண்டாவதற்கான காரணங்களைத் தவிர்க்க வேண்டும். மற்றும் மூளையில் ஏற்படக்கூடிய வியாதிகளினாலும் தலைவலி வரக்கூடும். அதற்குப் பரிசோதனைகள் செய்து கண்டுபிடித்துத் தக்க வைத்தியம் செய்வது அவசியமாகும். ஒற்றைத்தலைவலிக்குப் பூரண நிவாரணம் அளிக்க முடியாவிட்டாலும் தக்க மருந்துகள் எடுத்துக் கொள்வதின் மூலம் வலி கடுமையாகாமல் தவிர்க்கலாம்.

கேள்வி. 6 காக்கை வலிப்பு, மூட்டுக்களில் ஏற்படும் வாதங்கள் இவைகளை விளக்கவும்?

பதில். காக்கை வலிப்பு என்பது நரம்பு மண்டலத்தில் ஏற்படும் ஒருவகைக் குழப்பமாகும். இது மூளையில் ஏற்படும் ஒருவகை

எரிச்சலால் ஏற்படுகிறது. வலிப்பு ஏற்படும் போது நோயாளி நினைவை இழந்து விடுகிறார். தசைகளைக் கட்டுப்படுத்த அவரால் முடிவதில்லை. மூளையில் இந்த எரிச்சல் ஏற்படு வதற்குப் பலகாரணங்கள் உண்டு. இதுதான் நிச்சயமான காரணம் என்று கண்டுபிடித்துச் சொல்ல இயலாது. கர்ப்பத் திலோ அல்லது பிறப்பின்போதோ அல்லது பிறந்த பிறகோ நிகழும் பல சம்பவங்களின் காரணமாக ஏற்படக்கூடும். மூளையில் ஏற்பட்ட நோயின் விளைவாகவோ அல்லது காயத் தினாலோ விபத்தில் தவறிக் கீழே விழுந்ததினாலோ ஏற் படலாம். இதற்கு வைத்தியரைக் கலந்தாலோசித்து மருந்து சாப்பிடவேண்டும். இதற்கான மருந்துகளை தினந்தோறும் சாப்பிடவேண்டும். பல ஆண்டுகள்வரை விடாமல் சாப்பிட வேண்டும். வலிப்பு கட்டுப்படுத்தப்பட்டு விட்டால் ஒரு மனிதன் தனக்கு ஏற்ற வேலை எதையும் பார்க்கலாம். மூட்டுக் களில் ஏற்படும் வாதங்களை Authritis என்கிறோம். இதனால் வலியும் வீக்கமும் ஏற்பட்டு மூட்டுகள் இயங்குவது கடின மாகிறது. கை கால்களை மடக்குவது கஷ்டமாயிருக்கிறது. இது பலவித காரணங்களால் ஏற்படலாம். எந்த வகையைச் சேர்ந்தது என்பதைப் பரிசீலனை செய்து அதற்குத் தக்கபடி வைத்தியம் செய்தல் வேண்டும்.

கேள்வி: 7 வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணிகனுக்குக் கொடு என்று எண்ணெய் தேய்த்து நீராடுதலை சிலாகித்துக் கூறப்படுகிறது. ஆங்கில மருத்துவ முறை இதை ஊர்ஜிதப் படுத்துகிறதா?

பதில்: எண்ணெய் தேய்த்துக் குளிப்பதால் நமது சருமம் சுத்த மாகிறது. பொதுவாக வெப்ப சீதோஷ்ணமுடைய நாட்டில் வேர்வைத் துவாரங்களில் தூசியும் வேர்வையிலுள்ள உப்புச் சத்துக்களும் சேர்த்து அடைத்துக் கொள்ளுகின்றன. எண்ணெய் தேய்ப்பதால் அந்த அழுக்குகள் கரைந்து விடு கின்றன. சருமத்தில் ரத்த ஓட்டத்தை அதிகரித்து தசைகளும் மூட்டுகளும் சுலபமாக இயங்க உதவுகிறது சருமம் எண் ணெய்ப் பசையின்றி உலர்ந்திருந்தால் அரிப்பும் சில சரும வியாதிகளும் ஏற்படக்கூடும்.

கடலிலே எழுந்து மறைகின்ற அலைகளைப் போலத்தான்— கவலைகளும் மனிதன் என்று தோன்றி, குடும்பம் என்ற பந்தத்தை உண்டாக்கி மனைவி, குழந்தைகள், சொத்து, சுகம் என்பனவற்றை யெல்லாம் தன்னைச் சுற்றி பின்னிக்கொண்ட பின் பிரச்சனைகள் இருக்கத்தான் செய்யும்.

அவைகளோடு போராடும்போது சில எண்ணங்கள் நிறைவேறு கின்றன. பல ஏமாற்றத்தை அளிக்கின்றன.

கவலைக்கு யாரும் விதிவிலக்கல்ல. ஆக இவைகளுக்கெல்லாம் கவலைப்பட்டு, கவலைப்பட்டு உடலையும், உள்ளத்தையும் அழித்துக் கொண்டு, வேதனையான வாழ்வை தள்ளுவதைவிட மனத்திருப்தி யோடு வாழ பழகிக் கொள்வோமேயானுல் நோயை தடுத்துக் கொள்ள எடுத்துக்கொள்ளும் தலையாய முன்னெச்சரிக்கை.

ஆதலால் மனதை மகிழ்ச்சியாக வைத்திருங்கள்.

வாழ்க்கை, மலர்ந்த மலர்போல் மணம்வீசி இன்பம் செரிக்கும்.

இதனுல் உங்களுக்கு மருந்துகள் தொல்லையில்லை.

மருத்துவர்கள் அல்லல் இல்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக டாக்டர்களின் பில்கள் உங்களை திகைக்க வைக்காது.

⊛

FEES

அண்ணன்
தம்பி
நிலத்தகராறு.
கோர்ட் ஏறி பாகம்
பிரிந்தது !
தற்சமயம்
இரண்டிலும்
வக்கீல் மாடுகள்
உழுதுகொண்டிருக்கின்றன !

—வானம்பாடி இதழிலிருந்து

கலைக்கதிர்

வெள்ளிவிழா மலர்
ஒரு மதிப்பீடு

தமிழின் வளம் பெருகவும், அறிவியல் கருத்துக்கள் தமிழிலேயே பரவி வரவும் அயராது பணிபுரிவது 'கலைக்கதிர்'. அதன் வெள்ளிவிழா மலர் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய ஓர் இலக்கியப் பெட்டகமாகத் திகழ்கிறது.

கண்கவரும் வண்ணச் சித்திரங்கள், சிந்தனையைத் தூண்டும் கவிதைக் கருவூலங்கள், கருத்துடன் கூடிய கவிதைகள் ஆகியன நெஞ்சினில் நிறைந்து நிற்பவையாக உள்ளன. சூரியமண்டலம், ஆங்குள்ள வெப்பநிலை, அங்கு உயிரினங்களின் சாத்தியக்கூறு, இவை பற்றிப் பேராசிரியர் ஜி. ஆர். டி. அவர்கள் வழங்கியுள்ள கட்டுரையும் புகைப்படங்களும் பாமரமக்களும் அண்டதத்துவத்தைப் புரிந்துகொள்ள வழி கோலுகின்றன. திரு. தெ. பொ. மீ. அவர்களின் தீந்தமிழ்க் கட்டுரையின் வாயிலாக இராம இராச்சியத்தின் மாண்பினை அறிகிறோம். சென்னை, மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்களின் கட்டுரைகள் இலக்கியத் திறனாய்வு, உழைப்பின் வலிமைபற்றி விவரிக்கின்றன. டாக்டர் அரங்கசாமியின் காலப் பொருள் பற்றிய கட்டுரை நிலவளம் பெருக்கும் வழிமுறையைக் கூறுகின்றது. பின்னைப் புதுமையை மறந்து முன்னைப் பழமைக்கு நம்மை இழுத்துச் செல்வனவாக அமைந்துள்ளன, வாரியார் சுவாமிகள், குன்றக்குடி அடிகளார் ஆகியோர் வழங்கியுள்ள கருத்துக்கள்.

சுருங்கக்கூறின் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் வளர்ச்சியும், விஞ்ஞானக் கட்டுரைகள் மூலம் சமுதாய மேம்பாடும் ஏற்பட இவ்வெள்ளிவிழா மலர் பெரிதும் துணை செய்கிறது. புலவர் தமிழ்ப் பித்தன் கூறுவது போன்று இந்த ஏடு "தமிழ் வாழும் நாளெல்லாம் வாழ்க!" என்று வாழ்த்துகிறோம்.

இச் சீரிய பணியினைச் செவ்வையுற முடித்தமைக்காகத் திரு. ஜி. ஆர். டி. அவர்களுக்கு இத்தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் கடமைப்பட்டிருக்கிறது.

—'மேம்பாலம்'

வாழ்க மணமக்கள் !



செல்வி

சுசீலா

(ஆடிட்டர் திரு. கே. ஜெயராம் நாயுடு அவர்கள் புதல்வி)



செல்வன்

K. ராஜகோபால் B.E., M.Sc

(திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் புதல்வன்)

"ஒருமனதாயினர் தோழி — இத்
திருமணமக்கள் என்றும் வாழி"

சே. ப. நரசிம்மலு நாயுடு அவர்கள் தொகுத்த

பொன்மொழிகள்

1. உழுகிற நாளில் ஊர்விட்டுப் போனால்,
அறுக்கிற நாளில் ஆள்தேட வேண்டாம்.
2. உடையவன் பாராப் பயிர் ஆகுமா
3. ஊன்மிச்சம் உழவிலில்லை
4. எண்ணிப்பார் குடித்தனத்தை,
எண்ணாதேபார் வெள்ளாமையை.
5. எண்ணிச் செல்வது செட்டு,
எண்ணாமல் செய்வது வெள்ளாமை.
6. கரம்பை சுத்தினால் கால்பணம்
7. காடு காத்தவனும் கச்சேரி காத்தவனும் பலனடைவான்
8. செட்டிக்கும் வேளாண்மைக்கும் ஜென்மப் பகை
9. தன் ஆளில்லாத வெள்ளாமையும்,
தான் உழாத நிலமும் தரிசு.
10. தானே நீரேறும்
11. பருத்திச் செடியும் பாலுமுள்ளவனுக்கு பஞ்சமில்லை
12. பத்துக்குப் பின் பயிரு
13. பத்துஏர் வைத்துப் படைமரமும் தோற்றேன்,
எத்தனை ஏர் வைத்து கோவணமும் தோற்றாய்?
14. பாராதே கெட்டது பயிர், ஏறாதே கெட்டது குதிரை,
கேளாதே கெட்டது கடன்.



(நாயுடு அவர்களின் ‘விவசாயம்’ என்ற நூலிலிருந்து)

வாழ்க்கை எனக்குக்
கற்றுத் தந்தது என்ன?

"இல்லை என்று யாராலும் சொல்ல முடியாது"

ஜி. டி. நாயுடு அவர்களின் சமீபத்திய பேட்டியிலிருந்து....

மேலைநாட்டு நாகரீகத்தைப் பார்த்து நமது பண்பைத் தூக்கி எரிந்துவிட்டு அவர்கள் மோகத்தில் இருக்கிறோம். ஆனால் அவர்களிடத்தில் கற்க வேண்டியதை விட்டு நமது கலாச்சாரத்திற்கு ஒத்துக் கொள்ளாத வகையில் ஏற்று தீய பழக்கத்திற்கு அடிமையாக இருப்பது மிகவும் வருந்தத் தக்கது. நான் மேலைநாடுகளுக்குச் செல்லும் போதெல்லாம் ஒரு குறிப்பு எழுதி அதைக் கவனமாக எனது கோட்டில் வைத்துக் கொள்வேன். No Women, No Alcohol, No Meat என்று அதில் கொட்டை எழுத்தில் எழுதியிருப்பேன். நான் தினமும் இரவு படுக்கச் செல்லும் முன்பு அதை ஒருமுறை வாய்விட்டு வாசித்துப் பார்த்துக் கொள்வேன். இது எனது மன உறுதியை வெகுவாகப் பலப்படுத்தியது.

பல சமயங்களில் என்னைப் பெண்கள் விரும்பி அழைத்த போது எனது பாக்கட்டில் இருந்து இந்த குறிப்பை எடுத்துக் காட்டுவேன். அவர்கள் படித்துப் பார்த்துவிட்டு குறும்பாக சிரித்து விட்டுப்போய்விடுவார்கள். இந்த சிரிப்பின்போது என்னைப் பைத்தியக்காரன் என்று அவர்கள் நினைத்தாலும் சரி, இல்லை வாழ்க்கையை அனுபவிக்கத் தெரியாதவன் என்று நினைத்தாலும் சரி அதன் பொருளை என்றுமே புரிந்து கொள்ள நான் முயற்சி செய்யவில்லை. நான் ஒரு குறிக்கோளோடு வாழ்ந்தேன். எனது எண்ணங்களையும் சக்திகளையும் சிதறவிடாமல் என்னையே பாதுகாத்துக் கொண்டேன்.

எனக்கு ஒரு சுவையான நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. ஒரு சமயம் சிக்காகோ நகரில் என்னை மூன்று பெண்கள் சூழ்ந்து கொண்டு பலவந்தப்படுத்தினார்கள். என்னுடைய குறிப்பு ஒன்றும் பலன் அளிக்கவில்லை. அவர்களைப் பார்த்து நான் பரிதாபப்பட்டேன். ஏனென்றால் அவர்கள் மதுவை மிக அதிகமாக குடித்திருந்து தங்கள் அறிவை இழந்திருந்தார்கள் அவர்களை சீர்படுத்தி என் அறையிலேயே அன்று தங்க வைத்தேன். மறுநாள் சுயநினைவு பெற்றவர்கள் தங்கள் செய்கைக்கு ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்தார்கள். ஒரு முடிவை எடுத்துக் கொண்டால் எந்தச் சூழ்நிலையிலும்

எவ்வளவுதான் சபலங்கள் வந்தாலும் அதற்கு சிறிதும் இடம் கொடாது எதிர்நீச்சல் போட்டேன். இது வாழ்க்கையில் நான் கற்றுக் கொண்ட மிக முக்கியமான பாடம்.

இந்தியாவில் இருக்கும் மூடப் பழக்கங்களுக்கு இணையாக வேறு ஒன்றையும் காட்ட முடியாது. அறியாமையையே இதற்கு மூல காரணம். இந்த மூட நம்பிக்கைகளை ஒழித்துச் சீர்திருத்த எண்ணங்களைப் புகுத்தி வரும் ஈ. வெ. ரா. பெரியார் மீது எனக்கு அளவுகடந்த அபிமானம் உண்டு.

1924-ல் ஒய். எம். சி. ஏ. கண்காட்சியைத் திறந்து வைக்க வந்திருந்தார். தீபாவளிக்காக கண்ணம்பாளையம் மல் வேஷ்டிகள்தான் எடுப்பது வழக்கம். ஆனால், ஈ. வெ. ரா. பெரியார் கதர் வாங்கச் சென்றார். நான் அவரை விவாதத்திற்கு அழைத்தேன். கதர் சிறந்ததா? இல்லை மல்வேஷ்டி சிறந்ததா? என்பதைப்பற்றி; நான் தோற்று விட்டால் கதர் கட்டிக்கொள்கிறேன். நீங்கள் தோற்று விட்டால் ஒன்பது முழம் வேஷ்டியைக் கட்டிக் கண்காட்சிச் சாலையைத் திறக்க வேண்டும் என்று கூறினேன். விவாதத்திற்குப் பின்புதான் தோற்றுவிட்டதாகச் சொன்னார். நாங்கள் இருவரும் மல்வேஷ்டி கட்டிக்கொண்டு கண்காட்சிசாலைக்குச் சென்றோம். உள்ளே சென்றதும் பெரியார் ''இந்தப் போட்டியில் வெற்றி எனக்குத்தான்'' என்று பெருமிதத்துடன் சொன்னார். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. எப்படி என்று கேட்டேன். ''எனக்கு இலவசமாக மல்வேஷ்டி கிடைத்தது அல்லவா'' என்று நகைச் சுவையுடன் கூறினார். பெரியார் பெரியார்தான்.

சேலத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் நான்கூட மூட நம்பிக்கை பற்றியும் அதை ஒழிப்பதைப் பற்றியும் அதை அழிக்க வேண்டும் என்றும் அவருடன் பேசினேன்.

கடவுள் உண்டா இல்லையா என்று யாராலும் சொல்ல முடியாது. இருக்கிறாரா என்று விவாதமே செய்யக்கூடாது. அது அப்படியே இருந்து விட்டுப்போகட்டும். கடவுள் இருந்தார் என்றாலும் இல்லை என்றாலும் ஒன்றும் செய்வதில்லை. இருந்தால் இருக்கட்டும்; போனால் போகட்டும். ஆனால் கடவுள் இல்லை என்று யாராலும் சொல்ல முடியாது.

எனது இரண்டாவது மகள் சரோஜினியை செல்வன் பாலகிருஷ்ணனுக்குப் புரோகிதர் யாரும் இல்லாமலும் ஓமம் வளர்க்காமலும் சுயமரியாதை முறையில் திருமணம் செய்து வைத்தேன். நான் பெருமைப் படும் வகையில் அவர்கள் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகிறார்கள். ஜோஸ்யம், நாள், நேரம் பார்க்காத இந்தத் தாம்பத்திய வாழ்க்கை ஒன்றும் சோடை போகவில்லை.

பேட்டி கண்டவர் : பா. இராமமூர்த்தி பி. காம்., பி. எல்.

" ஆன்மா சிறகடித்துக் கொண்டிருக்கிறது "

பா. இராமமூர்த்தி, பி.காம்., பி.எல்

ஜோதி அணையத் தொடங்கியது
ஜீவன் பிரம்மத்தில் கலக்கத் துடித்துக் கொண்டிருக்கிறது.
மூச்சு மெல்லிய இழையாக ஓடிக்கொண்டிருப்பதும், நெஞ்சு
லேசாக விம்முவதும், குவிவதுமாக இயக்கம்.
கோவையின் பெருமைச் செல்வன் தந்தை ஜி. டி. நாயுடு,
தூய வெண் விரிப்புப் போடப்பட்ட கட்டிலில் நெடிது படுத்திருந்தார்.
அந்திம யாத்திரையின் அறிகுறிகள் வெளிப்படையாகத் தெரிகின்றன.
சோகம் அந்த அறையைக் கப்பி நிற்கிறது.
சுற்றமும் நண்பருமாக நானும் சில பேரும் கட்டிலைத் தள்ளி
நின்று கொண்டிருந்தோம்.

'ஏதாவது மாற்றம் நிகழாதா, பிழைக்க மாட்டாரா' என்று
ஒவ்வொரு உள்ளமும் தன்னுடைய தெய்வத்தை வேண்டிக்
கொண்டிருந்தது

மௌனம்.

அவ்வப்போது சிறு விசும்பல்கள்.

மேதையின் குடும்ப நண்பரும் வைத்தியருமான டாக்டர் சி. ராமசாமி அய்யர், டாக்டர் ஆர். சுப்ரமணியம் ஆகியோர் நாயுடுவின் உயிரைக் காப்பாற்ற எமனுடன் போராடிக் கொண்டிருந்தார்கள்.

நின்று கொண்டிருந்த நாங்கள், 'டாக்டர்களின் முகத்தில் நம்பிக்கை தோன்றுதா', என்ற நப்பாசையுடன் பார்த்துக் கொண்டிருந்தோம்.
மூச்சின் ஓட்டம் இன்னும் குறையத் தொடங்கியது.
எங்கள் மனதிலே அதிகமான பீதி – கலவரம் – அடி வயிற்றிலே
விவரிக்க முடியாத சங்கடம்.

டாக்டர் ராமசாமி அய்யர் இறுதியாக ஸ்டெதாஸ் கோப்பை
தன் காதுகளிலிருந்து கழற்றினார்.
பிராண வாயு சிலிண்டர் அப்புறப்படுத்தப்பட்டது.
அவர் கண்கள் குளமாயின.

I have lost my friend –
I have lost my friend.

என்று கூக்குரலிட்டபடி அழுது கொண்டே அறையை விட்டு வெளியே ஓடினார்.

எங்களுக்குப் புரிந்து விட்டது.
எவ்வளவு நேரம் அடைத்து வைத்திருப்பது இந்த வேதனையை?
நெஞ்சம் வெடித்தது – அழுதோம்.
துண்டிலே முகத்தைப் புதைத்துக் கொண்டு குமுறினோம்.

சேலை முகப்பிலே முகம் மறைத்துக் கொண்டு கதறினார்கள் தாய்மார்கள்.
வெளியே போன டாக்டர் ராமசாமி அய்யர் திடீரென உள்ளே வந்தார்.
தந்தை அவர்களின் துணைவியாரைக் கைப்பிடித்துக் கூட்டி வந்து,
"அம்மாவைப் பாருங்கோ, அம்மாவைப் பாருங்கோ" – என்று
தொண்டை கிழியச் சத்தம் போட்டார்!

தன் சிகிச்சை பலனளிக்காவிட்டாலும் பந்தப் பொருளைக் காட்டியாவது
போகும் உயிரை நிறுத்திவிட முயற்சிக்கிறாரா?
'நண்பனை இழக்கிறோம்' என்ற சோகத்தில் அவர் அறிவு தடுமாறி
விட்டதா?

மனைவி, மக்கள், சுற்றம், சொத்து, சுகம் எல்லாம் அறுத்துக்கொண்டு
ஜீவன் மேலே போகச் சிறகடித்துக் கொண்டிருக்கிறது.
இனி அது திரும்பாது.

அவருடைய தலைக்கருகில் நின்று கொண்டிருந்த தலைமகள் கிருஷ்ணம்மாள்வேலப்பன், தன் தந்தையின் இடது காதில் குனிந்து தெய்வீக நாமத்தை ஓதினர்.
நீர் வழியும் கண்களோடு இரண்டாவது செல்வி சரோஜினி-பாலகிருஷ்ணன் காதில் ஏதோ மங்கல வார்த்தைகளை உச்சரித்தார்.

தந்தையின் உதடுகள் அசைந்தன.
மகள்களுக்கு பதிலளிக்கிருரா ?
யாரோ குனிந்து காதைப் பொருத்திக் கேட்க முயற்சிக்கிருர்கள்.
தெளிவில்லை.

திருவேங்கட நாதனின் கற்பூரம் கலந்த தீர்த்தம் ஒரு தேக்கரண்டியில் எடுத்து வாயில் ஊற்றப்படுகிறது.
நீர் இறங்கிற்று என்றும் தெரியவில்லை — வெளியிலும் வழியவில்லை.

அத்தியாயம் முடிந்தது.
இழை அறுந்து விட்டது.
மூச்சு நின்று விட்டது.

உலகம் யாவும், பல முறை சுற்றி வந்த கால்கள் ஓய்ந்துவிட்டன.
கல்விப் பணிகளுக்கும், அறநெறிகளுக்கும் வாரி வழங்கிய கைகள் முடங்கி விட்டன.
அறிவுச் சுடரை ஒளி விட்டுக் கொண்டிருந்த விழிகள் மூடிக்கொண்டன.

நாளொன்றுக்குப் பதினெட்டு மணி நேரமும் சிந்தித்துக் கொண்டிருந்த எண்ணங்கள் ஒடுங்கி விட்டன.
அறியாமை, மூடப் பழக்கங்களுக்கு எதிராக இடைவிடாது செய்து கொண்டிருந்த போரில், வாகை சூடிய வெற்றிப் பெருமிதத்துடன் நெடிது பள்ளி கொண்டார்... —மீளா நித்திரையில் !

இன்று வைகுண்ட ஏகாதசித் திருநாள்.
பாற்கடலில் சயனத்திருக்கிருன் பரமன்.
மனம் கலங்காமல் வாருங்கள் ! ஆண்டாள் பள்ளு பாடுவோம் :
“அன்று இவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி !
சென்று தென் இலங்கை செற்ருய் நின் திறம் போற்றி !
குன்று குணிலெறிந்தாய் நின் குணம் போற்றி !
வென்று பகைகடக்கும் நின்கை வேல் போற்றி ! போற்றி!”

நினைவுகள் மறைவதில்லை
நெஞ்சம் மறப்பதில்லை

"நேற்று இருந்தவர் இன்று இல்லை என்ற பெருமையை உடைத்தது இவ்வுலகம்''. பரந்த மக்கள் இனத்திலே, அங்கும் இங்குமாக ஒரு சிலர் கடமை உணர்ச்சியால் சீரிய சமுதாயப் பணியாற்றி, தான் மட்டும் வாழாது பிறரையும் வாழவிட்டு, காலத்தால் அழிவில்லாத இடத்தைப் பெற்றுவிடுகிறுர்கள். இந்த வழியில் வாழ்ந்து, கொள்கையோடு நடந்து காட்டி, தாழ்த்தப்பட்ட மக்களையெல்லாம் மேல்தூக்கிவிட்டு வாழ்ந்தவர்தான் நமது மதிப்பிற்குரிய காலஞ்சென்ற **அசன்முகமது ராவுத்தர்** அவர்கள்.

காந்திஜியின் அறவழியில் சத்தியத்தை துணையாகக் கொண்டவர்.
ஜாதி மதம் என்ற பேதத்தை தூக்கி எறிந்துவிட்டு அன்பினாலேயே மனித இனத்தோடு தன்னைப் பிணைத்துக் கொண்டவர்.
ஏற்றத்தாழ்வுகளுக்கு அப்பாற்பட்டவர்.
ஒரு தொழிலாளியாக, கணக்கு எழுதுபவராக வாழ்க்கையை தொடங்கி இறை அருளிலும், தன் முயற்சியிலும் நம்பிக்கை கொண்டு தமிழ்நாடு கேரள மாநிலங்களில் தலை சிறந்த தொழில் மன்னராகவும் பேருந்து முன்னோடியாகவும் உன்னத நிலையை அடைந்தவர்.
சோதனைகள் பல ஏற்று சாதனைகள் பல பெற்றவர்.
நூற்றுக்கணக்கான தொழிலாளரது இல்லங்களில் ஒளி வீசச் செய்தவர்.
விளம்பரத்தை விரும்பாதவர். ஒரு கையால் கொடுத்ததை மறு கையும் அறியக்கூடாது என்ற பண்பாளர்
இயற்கை எய்தி ஒரு ஆண்டு ஆகிறது. அவர் விட்டுச் சென்ற கொள்கைகளை, தொடர்ந்து நடத்த எடுத்துக்கொள்ளும் சீரிய பணியே அவருக்கு செய்யும் தலையாய அஞ்சலி.
எளிமையான வாழ்வு, சுமுகமான பண்பு, அன்பு நிறைந்த இதயம் —இதுவே அவர் விட்டுச் சென்ற நினைவுகள்
அவர் மறைந்து விட்டாலும் நம் உள்ளமெல்லாம் நிறைந்து இருக்கிறுர்.

—பெற்று எடுக்காத மகன்

வேண்டுகோள்

வழக்கறிஞர்களுக்கு

வழக்குகள் மலிந்த நாடு நம் பாரத நாடு. ஏழைக்கு 'நீதி' எட்டாத கனியாக உள்ளது. பல காரணங்களில், ஏழைக்கு தகுந்த சட்ட ஆலோசனை கிடைக்காதது வருந்தத் தக்கது. நீதி மன்றங்களில், ஏழை தன்னுடைய நியாயமான வழக்கை எடுத்துக் கூற வழக்கறிஞர் இல்லாததால் நீதி மறுக்கப்படுவது கண்கூடு. இந்தப் பெரும் பிரச்சனையை முழுமையாக தீர்க்க முடியாதெனினும் நரசிம்மலு நாயுடு அறக்கட்டளை தன்னால் இயன்ற அளவிற்கு உதவ ஆவல் கொண்டுள்ளது.

கோவை மாநகரத்து வழக்கறிஞர்களே! அறக்கட்டளையினர் பரிந்துரைக்கும் வழக்குகளை இலவசமாக நடத்தி இந்த சீரிய சமுதாயப் பணியில் ஏழைகளுக்கு நீதி கிடைக்கத் துணை புரிவீர்.

தங்கள் இசைவை அறக்கட்டளையின் செயலருக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

மருத்துவர்களுக்கு

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" 1500 பேருக்கு ஒரு மருத்துவர் அமெரிக்காவில். 5187 பேருக்கு ஒரு மருத்துவர் இந்தியாவில்! அரசாங்கங்கள் இத்துறையில் பெரு முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் ஏழை மக்களுக்கு இன்னும் போதிய மருத்துவ வசதி எட்டுவதில்லை.

நரசிம்மலு நாயுடு அறக்கட்டளையானது தன்னால் இயன்ற அளவு ஏழையின் பிணிபோக்கும் நற்பணிக்குத் தன்னை அர்ப்பணிக்கிறது.

கோவை மாநகரத்து மருத்துவ நிபுணர்களே! இந்த அறக்கட்டளை பரிந்துரைக்கும், ஏழைப் பணியாளர்களுக்கு இலவச மருத்துவ உதவி அளிக்கத் தங்களைப் பணிவன்போடு அழைக்கிறோம்.

தங்களது ஒப்புதலை அறக்கட்டளையின் செயலருக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

E. PURUSHOTHAM

HARDWARE AND PAINT MERCHANTS

15, 19, MILL ROAD □ COIMBATORE-1

Phone office: 24222 Res: 25897

கவிஞர் மு. மேத்தாவின்

கண்ணீர்ப் பூக்கள்

[கவிதைத் தொகுதி]

விலை 5 ரூபாய்

விற்பனை உரிமை

தமிழ்ப் புத்தகாலயம்

576, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-5

விவரங்கட்கு :

வானம்பாடி

வி. சி. எஸ். காலனி

லங்கர்கானா ரோடு-2, கோவை-1

அச்சிட்டோர்: செந்தமிழ் அச்சகம், திருச்சிப் பாதை, கோவை-18.